

# ஹர ஹர சங்கரா

FREE COPY
June - 2026
Vol. 5 - ISSUE 08




நம்பிக்கையே தான் நாம் நடத்தும் நம் வாழ்க்கை

KODAMBAKKAM TIMES



SINCE 1974

# SHARADHA STORE



WMB

(ஹோம்லி டேஸ்ட் • பணிவுடன் பணிவிடை)


No.96/51, Arya Gowda Road, West Mambalam,
Chennai - 600 033. Mobile : 98408 53429

Plot No: 39, Chinthamani Vinayagar Koil Street, (Opp. Periyar Park),
Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.
E-Mail : saibuju.rr@gmail.com. Ph: 98841 53428

15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087.
Ph: 044 - 2377 3233 / Mobile : 98841 53428

**இலவச வீட்டு டெலிவரி. உயர்தர அனைத்து விதமான மளிகை சாமான்கள் கிடைக்கும்**

Available at Alwarthirunagar only. Timings 9 AM to 1 PM & 4 PM to 8 PM



## சீர் பட்சணங்கள்

11 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
9 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
7 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
5 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
4 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
3 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்

| பருப்பு தேங்காய் கூடு வகைகள் | இனிப்பு வகைகள் |
|---|---|
| லட்டு கூடு<br>மணோகர கூடு<br>மைசூர்பாகு கூடு<br>தேங்கா பர்பி கூடு<br>கடலை கூடு<br>பொட்டுகடலை கூடு<br>முந்திரி கூடு<br>ஆசிர்வாத பருப்பு தேங்காய் கூடு | மைசூர்பாகு, லட்டு<br>அதிர்சம், பாதுஷா<br>சோமாசி<br>தேங்கா பர்பி<br>விருத அப்பம்,<br>காப்பரிசி,<br>புட்டு, வறுபயிறு<br>கிடைக்கும் |



மாம்பலம் சாரதா ஸ்டோர்ஸ்
நெய் மற்றும் வெண்ணெய்



**2489 3223**
**98408 53429**

# ஸ்ரீதன்வந்திரி ஆயுர்வேத மருத்துவமனை

6/11, பட்டேல் தெரு, கோடம்பாக்கம்

(ஜே.வி. மருத்துவமனை பின்புறம்)

## மகத்தான ஆயுர்வேத மருத்துவம்

**சிறப்பான மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.**

**சிறப்பு அம்சம்**

**நீண்டகால நோய்கள்/சர்க்கரை நோய் மற்றும் அதன் பக்க விளைவுகள் சிகிச்சை.**

**பஞ்சகர்மா சிகிச்சை வீட்டில் மருத்துவம் தங்கும் வகுதி உண்டு**

**044 2472 3585 / 91767 95514**

**கிளை :**

ஜே.வி. பாலிகிளினிக், 10/11, சிவசங்கரன் தெரு, ராஜாஜி நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை - 600 043.

# முதியோர் இல்லம்

(ஜே.வி. மருத்துவமனை மேல்மாடியில் நடத்தப்படுகிறது)

**சிறந்த மருத்துவர்களால் 24 மணி நேரமும் பராமரிக்கப்படுகிறது.**

- சைவ உணவு
- தேவைக்கேற்ற மருத்துவ வசதிகள் / பராமரிப்பு
- பொழுது போக்கு வசதிகள் உண்டு
- வேண்டிய வசதிகள் செய்து தரப்படும்
- உதவியாளர் தங்க வசதி

31, ரெயில்வே பார்டர் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24.

(கோடம்பாக்கம் ரயில்நிலையம் அருகில்)

**98416 72952**

# முதலை வாகனம் கொண்ட மகாலட்சுமி திருக்கோயில்

கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டத்தில் அமைந்துள்ள மிகச்சிறப்பான பள்ளிப்புரம் மலையாள மகாலட்சுமி திருக்கோயிலைப் பற்றித்தான் நாம் தரிசிக்கவிருக்கிறோம்.



கேரளாவில் பொதுவாக பகவதி அம்மன் கோயில்களே அதிகம் இருக்கும். ஆனால் அன்னை மகாலட்சுமிக்கென அங்கு அமைந்திருக்கும் மிக அரிதான தனிக்கோயில் இது என்பது இதன் முதல் சிறப்பு.

**இந்த ஆலயத்தின் வியக்கவைக்கும் சிறப்புகள் :**

**அஷ்ட ஐஸ்வர்யம் தரும் அன்னை :**

இங்கு அன்னை மகாலட்சுமி நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். முன் கைகளில் நெல்கதிர் மற்றும் கிளியையும், பின் கைகளில் சங்கு, சக்கரத்தையும் ஏந்தியபடி அஷ்ட ஐஸ்வரியங்களையும் வாரி வழங்கும் கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

**அதிசய முதலை வாகனம் :**

இந்தக் கோயிலின் தல வரலாற்றின்படி அன்னை மகாலட்சுமி காஞ்சிபுரத்திலிருந்து ஒரு முதலை மீது அமர்ந்து இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அதன் அடையாளமாக இன்றும் கருவறைக்கு அருகிலேயே முதலையின்


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

திருவுருவம் கல்லால் செதுக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

**ஒன்பது கிரகங்களின் அதிதேவதைகள் :**

பொதுவாக நவக்கிரகங்களைத்தான் நாம் தரிசிப்போம். ஆனால் இக்கோயிலின் நுழைவு வாயிலில் ஒன்பது கிரகங்களுக்குமான அதிதேவதைகள் ஒரே இடத்தில் அருள்பாலிப்பது வேறு எங்கும் காண முடியாத தனிச்சிறப்பாகும்.

**இனிக்கும் தீர்த்தம் :**



கோயிலுக்கு அருகிலுள்ள ஏரி நீர் உப்பாக இருந்தாலும் மகாலட்சுமி வந்து இறங்கியதாகக் கருதப்படும் குளத்தின் நீர் மட்டும் தேன் போல இனிப்பது இன்றும் ஒரு ஆச்சரியமான நிகழ்வு.

**தம்பதி சமேத தரிசனம் :**

அம்மன் கிழக்கு திசையில் சூரிய நாராயணனைப் பார்த்தபடி அமர்ந்துள்ளார். இவரைத் தரிசிப்பது நாராயணனையும் சேர்த்து தம்பதி சமேதராக தரிசித்த பலனைத் தரும்.

**செல்வம் பெருக :**

பொருளாதார கஷ்டங்கள் நீங்கி, இல்லத்தில் செல்வம் பெருக நவராத்திரி மற்றும் மார்கழி மாதங்களில் இங்கு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

---

# ஸ்ரார்த்தத்திதியன்று சமைக்கப்படும் சமையலில் 1008 காய்கள்

ஒரு முறை தன் முன்னோர் ஸ்ரார்த்தத்துக்கு (திவஸம் / திதி) தன் குடிலுக்கு சாப்பிட வருமாறு விஸ்வாமித்ரரை வசிஷ்டர் அழைத்தார். அதற்கென்ன வந்தால் போச்சு. ஆனால் 1008 வகை காய்கறி செய்து படைக்க வேண்டும் என்றார்.

உலகில் 1008 வகையான காய்கறிகள் உண்டா? அப்படியே இருந்தாலும் இத்தனை கறிகாய்களை சமைத்து யாராவது உணவு படைக்க முடியுமா? அப்படியே சமைத்துப்போட்டாலும் அதைச்சாப்பிட யாரால் முடியும்? விஸ்வாமித்திரர் தன்னை வேண்டுமென்றே சிக்கலில் மாட்டி வைக்கவோ அல்லது அவமானப்படுத்தவோ இப்படிச் செய்கிறார் என்பது வசிஷ்டருக்குத் தெரியாதா என்ன. இருந்தபோதிலும் விட்டுக்கொடுக்காமல் ஆஹா 1008 வகை கறியமுது வேண்டுமா? அதற்கென்ன அருந்ததியிடம் சொல்லிவிடுகிறேன் என்றார்.



ஸ்ரார்த்தச்சாப்பாடு நாளும் வந்தது. விஸ்வாமித்திரர் இலையில் அமர்ந்தார். பாகற்காய், பலாக்காய், பிரண்டைத்துவையல் இவைகளோடு ஒரு வாழை இலையில் எவ்வளவு காய்கறிகள் படைக்கமுடியுமோ அவ்வளவு மட்டுந்தான் இலையில் இருந்தன.

1008 காய்கறிகள் இல்லை. விஸ்வாமித்திரர் கோபத்துடன் என்ன இது? 1008 வகை காய்கள் எங்கே? என்று வசிஷ்டரை வினவினார். அவரோ நான் அருந்ததியிடம் சொல்லிவிட்டேனே அவளையே கேட்டுக்கொள்ளுங்கள் என்றார்.

இவர்கள் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த உலகம் போற்றும் உத்தமி அருந்ததி தானே முன்வந்து ஒரு ஸ்லோகத்தை கூறிவிட்டு "இதுதானே ஸ்ராத்தகால விதி உங்களுக்கு தெரிந்திருக்குமே" என்றாள். விஸ்வாமித்திரர் வாயடைத்துப் போனார். பேசாமல் சாப்பிட்டுவிட்டு வாழ்த்தி விட்டுப்போனார். அருந்ததி கூறிய அந்த ஸ்லோகம் என்ன?

காரவல்லி ஸதம் சைவ வஜ்ரவல்லி ஸதத்ரயம்
பனஸம் ஷட் ஸதம்சைவ ஸ்ரார்த்தகாலே விதீயதே

"ஒரு ஸ்ரார்த்தத்திதியன்று சமைக்கப்படும் சமையலில் பாகற்காய் 100 காய்களுக்குச்சமம். பிரண்டைத்துவையல் 300 காய்ளுக்குச்சமம், பிஞ்சு பலாக்காய் பலாமுசு 600 காய்ளுக்குச்சமம் என்று பாடல் கூறுகிறது.

ஆயிரம் காய்கள் ஆயிற்றா? மீதி இலையில் எண்ணிப்பாருங்கள் எட்டுகாய் கறிகள் வைத்திருக்கிறேன். ஆக மொத்தம் 1008 என்றாள். சாஸ்த்திரப்படி விளக்கம் சொன்ன அருந்ததியின் பதில் நியாயம் தானே?

# ஸ்ரீ மஹாபெரியவா அஷ்டகம்

(வார வழிபாட்டு போற்றிப் பாமாலை)





**ஞாயிறு :**

உலகேழும் உயிர்ப்பிக்க ஒளிகூட்டும் பகலவனை
உளமார போற்றிடவே சந்ததமும் தந்தனவா
உலகேழும் ஆள்பவனாய் உத்தமனாய் ஓங்குமிறை
ஆச்சார்ய சங்கரனே ஸ்ரீசரணா போற்றி போற்றி !




**திங்கள் :**

முழுமதியாம் திங்கள்சூழ் சடையோனின் திருவருளாய்
முன்னமைந்த பெருங்குருவின் பொற்பாதம் பணிந்தேகி
திருவருளால் அனுதினமும் சீர்வாழ்வும் பெற்றிடவே
திருஅனுஷப் பெருந்தகையோன் ஸ்ரீசரணா போற்றி போற்றி!




**செவ்வாய் :**

செவ்வாய் மலர்ந்தருளி செப்பியநல் லருளொளியோன்
செம்பாதம் போற்றிவந்தே அறத்தோடு புறம்நாடி
செங்கதிரின் ஒளிபோல வளமோடு புவியோங்க
செம்பவளத் தலமேகும் ஸ்ரீசரண போற்றி போற்றி!




**புதன் :**

அறவொளியைத் திருவருளால் அகத்தினிலே நிறைப்பவனை
அனுதினமும் வெண்காட்டு மறையொளியாய் த்யானித்து
அன்போடு சுற்றமதை பேணிவரும் பண்புபெற
அங்கயற் கன்னிதல ஸ்ரீசரணா போற்றி போற்றி !




**வியாழன் :**

குணக்குன்றாய் குருபரனாய் குவலயத்துக் கோமகனாய்
எண்குணத்தான் எழில்முகத்தான் ஏகாந்த ரூபனவன்
கருணையருள் பெற்றிடவே கதியெனவே தாள்பணிந்து
கலிவினையும் களைந்திடவே ஸ்ரீசரணா போற்றி போற்றி !




**வெள்ளி :**

கலிவென்று கடைத்தேற விடிவெள்ளி போல்வாய்த்த
கிலிபோக்கு மருளோடு வலிநீக்கும் மருந்தீசன்
வளிபோல அருளாசி தளிராக நமைகாக்க
கிளியேந்தும் தாய்தலத்து ஸ்ரீசரணா போற்றி போற்றி!




**சனி :**

பொங்குசனி புலம்பெயர்க்கும் குருபார்வை தன்னொளியும்
பொங்குமருட் பலன்கொண்டே வாழ்விதனில் இன்பயக்க
பொங்குபுலர் கதிரொளியோன் வழங்குமருள் தாம்கூட்டும்
பொங்குமருட் பாதமுடை ஸ்ரீசரணா போற்றி போற்றி !




**சரணம் :**

நானிலம் சிறந்திட நாநலம் கொண்டே
நல்வினை என்றும் நம்மில் கொண்டிட
நற்றமிழ் கொண்டே நாதனை நினைந்தே
நாளும் போற்றுவோம் நற்பதம் போற்றி போற்றி!

பெரியவா சரணம் பெரியவா சரணம் ஸ்ரீமஹா பெரியவா அபயம்
குருவுண்டு - பயமில்லை : குறையேதும் இனியில்லை !!

# திருமுல்லைவாயில் நந்தியின் சிறப்பு




காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த தொண்டைமான் மன்னன், "ஓணன்" மற்றும் "காந்தன்" என்ற அசுரர்களுடன் போரிடச் சென்றார். அவர்கள் எருக்கலைச் செடிகள் நிறைந்த கோட்டைக்குள் மறைந்திருந்து போர் புரிந்தனர்.

SREE MANGALAGURU JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

மன்னன் யானை மீது செல்லும்போது, முல்லைக் கொடிகள் யானையின் காலைச் சுற்றிக்கொண்டன, அவற்றை வாளால் வெட்டும்போது, உள்ளே இருந்த லிங்கத் திருமேனியில் பட்டு ரத்தம் கசிந்தது.

வருந்திய மன்னனுக்கு ஆறுதல் கூற சிவபெருமான் நேரில் தோன்றி, தன் வாகனமான நந்தியை அசுரர்களுடன் போரிட அனுப்பினார்.

பொதுவாகக் கோவில்களில் நந்தி பெருமான் சிவபெருமானைப் பார்த்தபடிதான் அமர்ந்திருப்பார். ஆனால், இத்தலத்தில் மன்னனுக்குத் துணையாகப் போர்க்களத்தை (கோவில் வாசலை) நோக்கித் திரும்பி அமர்ந்துள்ளார்.

"இன்றும் ஊருக்கு வரும் ஆபத்துகளை நந்தி கவனித்துக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது."

பகைவர்கள் மீண்டும் ஊருக்குள் வராமல் இருக்கவும், வரும் ஆபத்துகளை முன்கூட்டியே தடுக்கவும் நந்தி எம்பெருமான் இன்றும் வாசலைப் பார்த்தே காவல் காத்து வருகிறார் என்பது பக்தர்களின் ஆழமான நம்பிக்கை.

# கர்மாவின் ஒன்பது விதிகள்

**ஒன்றாம் விதி :** இந்த பிரபஞ்சத்தில் நாம் எதை செய்தாலும் அது நமக்கே திரும்பி வரும்.

**இரண்டாம் விதி :** வாழ்க்கையில் எதுவும் தானாக நடப்பதில்லை. நமக்கு தேவையானவற்றை நாம் தான் நகர்த்தி செல்ல வேண்டும்.



**மூன்றாம் விதி :** சிலவற்றை ஏற்றுக்கொண்டால் மட்டுமே மாற்றம் நிகழும்.

**நான்காம் விதி :** நம்மை நாம் மாற்றி கொள்ளும்போது வாழ்க்கையும் நம்மை பின்பற்றி மாறும்.

**ஐந்தாம் விதி :** நம் வாழ்வில் நிகழும் அனைத்திற்கும் நாமே பொறுப்பு என்பதை உணர வேண்டும்.

**ஆறாம் விதி :** நேற்று, இன்று, நாளை இது மூன்றும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையதே.

**ஏழாம் விதி :** ஒரே நேரத்தில் இரு வேறு விஷயங்களை சிந்திக்க முடியாது.

**எட்டாம் விதி :** நமது நடத்தை நம் சிந்தனையும், செயலையும் பிரதிபலிக்க வேண்டும்.

**ஒன்பதாம் விதி :** நம்முடைய கடந்த காலத்தையே நினைத்து கொண்டு இருந்தால் நிகழ்காலம் கடந்து சென்றுவிடும்.

# பச்சையம்மன் என்னும் ஆதி மீனாட்சியம்மன்

தமிழ்நாட்டில் பழமையான சக்தி வழிபாட்டு முறையில் பச்சையம்மன் வழிபாடு முக்கிய அங்கம் வகிக்கிறது. தொடக்கத்தில் தனி சக்தி வழிபாட்டிலும், தாய் தெய்வ வழிபாட்டிலும் ஓர் அங்கமாக இருந்து பின்னர் சிவனோடு இணைக்கப்பட்டு பார்வதியாகவும் மீனாட்சியாகவும் வணங்கப்படுபவள் பச்சையம்மன்.

**பச்சையம்மன்**

இவள் வளமையையும், செழுமையையும் தருபவளாக விளங்குகிறாள். அதனால் தான் பச்சையம்மன் ஆதி மீனாட்சி என அழைக்கப்படுகிறாள். மீனாட்சியாக மதுரையில் முடிசூடி ஆளும் முன்பே இப்பூவுலகிற்கு தவம் செய்வதற்காக வந்தவள் என்பதால் பச்சையம்மன் என்ற சொல் மதுரை மற்றும் அதற்கு அப்பால் இல்லை.

தமிழ்நாட்டில் தொண்டை நாடு முதல் தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்கள் வரை பரவலாக பச்சையம்மன் கோயில்களைக் காணலாம்.

சீலமால், இமயம்வரை, காசிமாநகரமும், திருக்காஞ்சி, அருணை நகரும், சேம்பிலிபுரம், செஞ்சி, சிறுகரும்பூர், தில்லை, திருமுல்லைவாயில், நெல்லூர், சேலையூர், தண்டரை, சேர்ப்பாகைப் பெருந்துறை, சீக்கனாங்குப்பம், மீஞ்சூர், சிதம்பரம், சீர்காழி, சென்னராயபுரம், தஞ்சை, திருக்கழுகுன்றம், சேவூர், ஆலவாய்க் கருங்குழி, வாலைப்பந்தல், ஒற்றியூர், அம்பிகைவனம், குடந்தை, அரகண்ட நல்லூரும், சாத்தணம் நகர்முதல் அகிலமாய் அமர்ந்த தாயே என்று பச்சையம்மன் குடியிருக்கும் பிரபலமான தலங்கள் குறித்து செங்கல்பட்டு பச்சையம்மன் கோயில் தலவரலாறு குறிக்கிறது.

பச்சை நாயகி, பச்சைவாழி அம்மன், பச்சம்மன், பச்சம்மாள், பச்சிம்மா என்றும் சிவன் கோயில்களில் ஈசனின் துணையாக மரகதவல்லி, மரகதாம்பாள் என்றும் அழைக்கப்படுகிறாள்.

தமிழகம் தவிர ஆந்திரா, கர்நாடகாவிலும் பச்சையம்மனுக்கு வேறு பெயர்கள் வழங்குகின்றன. கிராம தெய்வம், குல தெய்வம் மற்றும் காவல் தெய்வமாக பல சமூகங்களில் கொண்டாடப்படும் பச்சையம்மனை வணங்குபவர்கள் பச்சை, பச்சம்மா, பச்சையப்பன், பச்சமுத்து என தங்கள் வாரிசுகளுக்குப் பெயர் சூட்டுகின்றனர்.

பச்சையம்மன் கோயில்களில் வாழ்முனி, செம்முனி, கருமுனி போன்ற வித்தியாசமான பெயர்களில் பெரிய சுதை உருவங்களாக முனிவர்களது சிலைகள் காணப்படுகின்றன. மன்னாதன், மன்னார்சாமி, மன்னதீஸ்வரன் என்ற பெயர்களில் சிவனுக்கு தனிச் சன்னதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கோயில்களில் லிங்க வடிவிலும் முழு உருவமாகவும் இறைவன் வணங்கப்படுகிறார். அம்மனும் முனிகளும் மட்டும் உள்ள கோயில்களும் உண்டு.

சிதம்பரத்திற்கு அப்பால் உள்ள தலங்களில் பெரும்பாலும் பச்சையம்மன் தனது நிழலிலிருந்து உருவான காத்தாயி அம்மனுடன் சேர்ந்து அருளும் வகையில் கோயில்கள் அமைக்கப்படுகிறது.

செங்கல்பட்டு ஞானகிரி பச்சையம்மன் குறித்து சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலில் பச்சையம்மன் வரலாறு தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர பச்சையம்மன் குறித்து விரிவான நூல்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

தற்போதைய பச்சையம்மன் வரலாறு கைலாயம் தொடங்கி காஞ்சிபுரம் வந்து செய்யாறு சென்று திருவண்ணாமலையில் ஈசனுடன் இணையும் விழாவாக ஆகி மீண்டும் யோக நிலையில் பல்வேறு தலங்களில் அருளுவதாக உள்ளது.

கயிலையில் ஒருநாள் சிவனும், பார்வதியும் தனிமையில் உலக இயக்கம் குறித்து பேசிக் கொண்டிருந்தனர். இடையே அனைத்து உயிர்களுக்கும் படியளக்கச் செல்வதாகக் கூறிவிட்டுப் புறப்பட்ட ஈசனை சோதிக்க விரும்பிய உமாதேவி சிறிய சிமிழுக்குள் ஓர் எறும்பைப்பிடித்து மூடி எவருக்கும் தெரியாமல் வைத்துக் கொண்டாள்.



படியளக்கும் பணி முடிந்து திரும்பினார் சிவன். அவரிடம் மென்சிரிப்போடு போன காரியங்கள் முடிந்ததா, படியளந்தாயிற்றா? எதுவும் மிச்சமில்லையே? யோசித்துச் சொல்லுங்கள் எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டாள் உமையவள்.

சிவனார் சிரித்துவிட்டு, இல்லை, எதுவும் மிச்சமில்லை என பதிலளித்தார். அதைக்கேட்ட பார்வதி குறும்பாகச் சிரித்துவிட்டு தன் பாதுகாப்பிலிருந்த சிமிழைத் திறக்க அதனுள் இருந்த எறும்பு அவள் எதிர்பார்ப்புக்கு மாறாக ஓர் அரிசியைக் கவ்வித் தின்று கொண்டிருந்ததைக் கண்டு திகைத்தாள்.

சிவன், என்னை சோதிக்க ஒரு பாவமும் செய்யாத ஒரு சிற்றெறும்புதான் கிடைத்ததா? இந்தச் சின்ன எறும்பை சிறை வைத்த பாவச்செயல் உன் பாவக்கணக்கில் சேர்ந்திருக்கிறதே, அதற்கு என்ன செய்யப் போகிறாய்? எனக் கேட்க மனம் கலங்கினாள் மகேஸ்வரி.

ஒரு நாள் அதிகாலை கயிலையில் சிவன் முனிவர்களுக்கு ஞானத்தை நயன தீட்சையால் உபதேசித்துக் கொண்டிருந்த நேரம் அங்கு வந்த பார்வதி சூழலின் மௌனத்தை உணராமல் ஈசனின் கண்களை மெலிதாகப் பொத்தினாள். ஈசனின் கண்களை மூடியதால் அதிலிருந்து ஒளி பெற்றுக்கொண்டிருந்த சூரிய சந்திரர்கள் இருண்டார்கள், உலகம் இருண்டது, நயன தீட்சை தடைப்பட்டதால் முனிவர்களும் உணர்வற்று மயங்கி விழுந்தனர்.

உலக இயக்கம் தொடர வேண்டி ஈசன் தன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். உலகம் அதிக வெப்பத்தில் தகித்தது. நிலைமையை உணர்ந்த அம்பிகையின் கரங்களில் இருந்து வியர்வை பொங்கி வழிந்து பாகிரதி என்னும் கங்கை நதியாக பிரவகித்தது. தன் கைகளை விலக்கிக்கொண்டு சிவனை நடுக்கத்துடன் வணங்கி நின்றாள்.

சிவன் மூன்றாவது கண்ணை மூடிக்கொண்டு இரு கண்களையும் திறந்தார். உலகம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. பார்வதி பயந்து சிவனிடம் அறியாது செய்த செயலை மன்னிக்கக் கேட்டாள். பாவங்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்தாலும் அதற்குரிய நிவர்த்தியைத் தேடிப் போகத்தான் வேண்டும். உரிய காலம் வரும் வரை காத்திரு. பின்னர் பாவங்களுக்கு உரிய நிவர்த்தியை செய்து பாவம் போக்கு என இமவான் பார்வதியிடம் எடுத்துரைத்தார்.

பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வழிபட்டுச் சென்றதால் வருந்திய ஈஸ்வரி ஐயனே, இதென்ன நியாயம்? எல்லாம் அறிந்த மாமுனிவரே நம்மைப் பரித்து வணங்கலாமா? அவர் மீண்டும் இந்த தவறை செய்யாமல் இருக்க தங்கள் உடலில் சரிபாதி எனக்குத் தரவேண்டும் என சிவபெருமானிடம் வேண்டினாள்.

தவம் செய்தால் தருவதாகச் சொன்னார் இறைவன். உடனே பூவுலகு வந்தாள் இங்கே இமயம் தொடங்கி குமரி வரை உள்ள அனைத்து சிவதல தீர்த்தங்களிலும் நீராடி அதன் பின்னர் தவம் செய்து பலன் பெற விரும்பினாள். அவளது தோழியரான அறுபத்து நான்கு யோகினியரும் அவளுடன் வந்தார்கள். அப்படி தல தரிசனம் செய்தவாறே கேதாரம், காசி முடித்து உஜ்ஜயினி வந்தாள் அம்பிகை. அந்நகரை அக்னி வீரன், ஆகாச வீரன் உள்ளிட்ட ஏழு சகோதரர்கள் ஆண்டு வந்தனர்.

கொடுங்கோலர்களான அவர்கள் திரிலோக சுந்தரியான உமாதேவியைக் கண்டார்கள். தீய எண்ணத்தோடு அவளை அணுகினார்கள். தவக்கோலம் பூண இருந்ததால் சினத்தை வெளிப்படுத்தாமல் சிவனைத் துதித்தாள் அம்பிகை. சிவனாரது கூற்றின்படி திருமால், பிரும்மா மற்றும் அஸ்வினி தேவர்கள் முதலானோர் தேவிக்குப் பக்க துணையாக வந்தனர்.

தன் சகோதரியிடம் தகாத வார்த்தை பேசிய அக்னிவீரனை திருமால் வான் அளவு உயர்ந்து அழித்தார். வானளவு உயர்ந்து நின்றதால் வான்முனி எனப்பட்டு வாழ்முனி என பின்னர் அழைக்கப்பட்டார். உடன் வந்த ரிஷிகளும் திருமாலைப் போல் பேருரு கொண்டனர். அடுத்து வந்த ஆகாய வீரனை செம்முனி என்னும் அகத்தியர் வென்றார். தொடர்ந்து வந்த ஜலவீரன், சண்ட வீரன், ரணவீரன், கோட்டைவீரன், அந்தவீரன் ஆகியோரை செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, பூமுனி என்ற பெயர்களோடு நாரதர், பராசரர், வியாசர் போன்ற முனிவர்கள் வதைத்தனர்.

முடிவில் அக்னிவீரனின் மகனான வீரமுத்து வெகுண்டெழுந்து போருக்கு வந்தான். வாழ்முனியான திருமால் அவனை சம்ஹாரம் செய்யப்போகும் போது அவன் மனைவி வீராட்சி, விஷ்ணுவின் காலில் விழுந்து தன் கணவனுக்கு உயிர்ப்பிச்சை தரக்கேட்டாள். வாழ்முனி இரக்கப்பட்டு அவனை விடுவித்து அம்பிகையின் கோயில் காவலராக இருக்க உத்தரவிட்டார்.

அக்னிவீரன், ஆகாசவீரன், ரணவீரன், ரத்தவீரன் ஆகியோரின் உடல்களை பூமிக்குள் புதைந்து தலை மட்டும் தெரியும்வண்ணம் அழுத்தியபடி முனிவர்கள் அமர்ந்தனர். உடல் பாதாளத்திலும் தலை மட்டும் பூலோகத்திலும் இருந்த காரணத்தால் அவர்கள் பாதாள அசுரர்கள் எனப்பட்டனர்.

பின்னர் தவம் மேற்கொள்ள இருந்த தங்கை பார்வதியிடம் தேவைப்படும் சமயத்தில் எங்களை அழைப்பாயாக தவம் இருக்கும் உனக்கு வேங்கடமலை நாச்சியார் என்ற மகாலட்சுமி, பூங்குறத்தி நாச்சியாராக சரஸ்வதி, ஆனைக்குறத்தி என்ற இந்திராணி, முடியால் அழகி எனப்படும் ரதி, வனக்குறத்தி என்கிற வள்ளி ஆகியோர் துணை இருப்பார்கள் எனக் கூறிச் சென்றார் திருமால்.

தன் துணை தேவியர்களுடன் உமை காசிமாநகர் சென்று அன்னபூரணியாக இருந்து அறம் செய்து கொண்டிருந்தாள். சிவன் உமையிடம் யோகபூமியான காசியை விட்டு, மோகபூமியான காஞ்சி செல்வாய் எனக்கட்டளையிட்டார்.

அதன்படி ஒவ்வொரு சிவதலமாக சென்று தவம் செய்து பின்னர் காஞ்சியில் காமாட்சியாக அமர்ந்தாள். சிவன் இரு நாழி நெல் கொடுத்து தருமத்தைப் பேணிக்காக்கக் கூறினார். அதைக்கொண்டு 32 வகை அறங்களையும் செய்ததோடு தான் தங்கி தவம் செய்து வந்த திசைகளில் எல்லாம் அறம் பெருகும்படி செய்தாள். அவளது பணியில் மகிழ்ந்த சிவபெருமான் அருணைக்கு வந்து பவளப்பாறைக் குன்றில் தவம் செய்து என் உடலில் இடப்பாகம் பெறுக எனக் கட்டளையிட்டார்.

அதன்படி திருவண்ணாமலை நோக்கி சென்றாள். வழியில் வெப்பம் தகித்தது, பூஜை செய்யும் நேரமும் நெருங்கியது தன் குமாரன் குமரனிடம் நீர் கொண்டுவர வேண்டினாள். செவ்வேளும் வேலை செலுத்த அது அங்கிருந்த சிறு குன்றைத் துளைத்து நின்றது. அங்கிருந்து நீர் பிறிட்டுப் பெருகி ஆறாக ஓடிவந்தது அது சேயாறு என அழைக்கப்பட்டு செய்யாறு என மாறி வழங்கியது.

வாழைமரங்களைக் கொண்டு பந்தல் அமைத்துக் கொடுத்தான் குமரன். அந்தப்பந்தலில் இருந்து அம்பாள் தியானம் செய்ததால் அந்த இடம் வாழைப்பந்தல் என அழைக்கப்பட்டது. அங்கு சிவதீட்சை பெற்று சிவலிங்கத்தை நிறுவி பூஜை செய்ய எண்ணினாள்.

கௌதம முனிவரை நினைக்க அவர் நேரில் தோன்றி சிவதீட்சையும் இரண்டு சிவலிங்கங்களையும் வழங்கினார். ஒன்றை தன் தலையிலே தரித்துக்கொண்டு மற்றொன்றை அங்கேயே நிறுவி பூஜை செய்தாள். கௌதமரும் அம்பிகை செய்த பூஜையில் கலந்துகொண்டு பேரானந்தம் அடைந்த அந்த இடம் வாழைப்பந்தல் பச்சையம்மன் கோயில் என வழங்கப்படுகிறது.

---

குரு சரணம் குரு நாதா சரணம்

# சித்தர்களின் சிறப்பு

சித் என்றால் அறிவு நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர் என்றும் அறிஞர்கள் என்றும் பொருள்படுவதாக பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. சித்தர்கள் மருத்துவத் தோடு யோகம், ஜோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய பொக்கிஷங்களையும் நமக்கு அளித்தவர்கள். மற்றும் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், தாரணை, பிரத்தியாகாரம், தியானம், சமாதி முதலிய எட்டு விதமான யோகங்கள் மூலம் எண்பெரும் சித்திகளைப் பெற்றவர்கள் சித்தர்கள்.

சித்தர்களில் முதன்மை பெற்றவர்கள் 18 பேர். அவர்களை பலர் பலவிதமாக பட்டியலிட்டு உள்ளார்கள். சித்தர்கள் என்றால் சித்து வேலை, மாய வேலை செய்பவர்கள் என எண்ணுவது தவறு. இப் பூவுலகில் மனிதனை நல்வழிப்படுத்த அவர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த கலையே சித்து.

மக்கள் கலியுகத்தில் இயந்திர வாழ்க்கை வாழ்ந்தாலும் கூட அவர்களுக்கு நிம்மதி தரக் கூடிய இடங்களாக ஆலயங்கள் திகழ்கின்றன. இத்தகைய ஆலயங்களில் சித்தர் ஒருவர் அடங்கினால் அந்த ஆலயம் மேலும் பல சிறப்புகளை பெறுகிறது. அவைகள் 1. அகத்தியர் அனந்த சயனத்தில் : கேரளா பத்பநாதபுரம். 2. அகப்பேய் சித்தர் : எட்டக்குடி, 3. திருமூலர் : சிதம்பரம், 4. நந்தீசா : திருவாவடுதுறை ஆதினம், 5. போகர் : பழனி, 6. ராமதேவர் : அழகர் மலை, 7. இடைக்காடர் : திருவண்ணாமலை, 8. சட்டமுனி : சீர்காழி, 9. கடலமுனி : திருவாரூர், 10. மச்சமுனி : திருப்பரங்குன்றம், 11. கொங்கணவர் : திருப்பதி, 12. பதஞ்சலி : இராமேஸ்வரம், 13. பாம்பாட்டி சித்தர் : திருக்கடவூர், 14. சுந்தரானந்தர் : மதுரை, 15. குதம்பைச் சித்தர் : மயிலாடுதுறை, 16. கருவூரார் : தஞ்சாவூர், 17. கோரக்கர் : திருக்கழுகுன்றம், 18. தன்வந்திரி : வைத்தீஸ்வரன் கோவிலிலும் அடக்கமாகியுள்ளர். இதுவே இத்தலங்கள் சிறப்பு பெற்றவையாகவும், பக்தர்களின் துயர்களை நீக்கி மன அமைதியை அளிக்கும் இடமாகவும் விளங்குகிறது.




சித்தர்கள் தம் சித்தத்தை கொண்டு மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கையும் சிவமாக ஆக்கிக் கொண்டவர்கள். கோவில்களில் யந்திரங்களை ஸ்தாபிதம் செய்து அதன் மேல் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வார்கள். குறிப்பிட்ட வருடங்கள் கழித்து ஆகம நெறிப்படி மீண்டும் குடமுழுக்குச் செய்வர். ஆனால் சித்தர்கள் அடக்கமாகியிருக்கும் கோவில்களுக்கு குட முழுக்குத் தேவையில்லை. இவர்களின் உயிர் சக்தியின் இயக்கம் எப்போதும் அலை இயக்கமாக அவ்விடத்தில் பரவியுள்ளது. இதனை பல சன்னதிகளுக்கு செல்லும் போது நாம் உணர முடியும். நமது உடலில் ஒரு விதமான அதிர்வு ஏற்பட்டு மனம் நிம்மதி அடையும். ஆகையால் தான் இவர்கள் இருக்கும் இடங்களை நோக்கி நாம் செல்கிறோம். அவர்களை நினைத்து மனதை ஒரு நிலைப்படுத்தி தியானத்தில் ஈடுபடும் போது பல சிக்கல்களுக்கு நல்வழி பிறக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கடவுளை காண வேண்டி முயற்சி எடுப்போரை பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்களை சித்தர்கள் என்றும் தேவாரம் கூறுகிறது. இறைவன் இவர்களுக்கு ஜோதி வடிவில் காட்சி தருவார். தன் பக்தர்களுக்கு சித்தர்களும் ஜோதி வடிவிலேயே காட்சி தருவார்கள். உலகத்தவரின் துயர்களை நீக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சமாதி அடைந்த சித்தர்கள் அக் காரியத்தை இன்றளவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு உலக மக்களை நல் வழிப்படுத்தும் சித்தர்களை போற்றி வணங்கினால் அவர்களுடைய அருளும் அதன் மூலம் இறையருளும் நமக்கு கிட்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர் ரூ 920 மட்டுமே

* Condition Apply

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING
84 Years
ANNIVERSARY
Since 1942

## It's our 84th Birthday, but we chose to gift you !

## Vadu Mango : Buy 1 Get 1 Free*




**₹ 170**
(250g + 250g)

Mylapore Ganapathy's®
Since 1942

**BUTTER & GHEE**

**MYLAPORE BRANCH :**
# 14, Chitrakulam West Street,
( Near P.K.Mahal Kalyana Mandapam )
Mylapore, Chennai - 600 004
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH :**
# 50, Arya Gowda Road,
( Near Shobanaa Kalyana Mandapam )
West mambalam, Chennai - 600 033
Tel : 044-4856 6363, 89390 36363

*Conditions Apply:
- Stock available from 03rd May 2026
- Offer valid till stock available

Each Jar contains Vadu mango of 250g net and cannot be sold as single unit

SHOP ONLINE www.mylaporeganapathys.com